2014 ஜூலை 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பூச்சி அத்திப்பேடு, அரிக்கம்பேடு மற்றும் கொமக்கம்பேடு ஆகிய கிராமங்களில் காவல் துறையினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்திற்கு கொசஸ்தலை ஆற்றில் மணல் எடுப்பதில் ஏற்பட்ட முன் விரோதம் காரணம் என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கொலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *22-7-2014 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள், வீட்டில் கொலை செய்யப்பட்டது குறித்து. தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. விசி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. ப. சிவக்கொழுந்து, திரு. கு. நல்லதம்பி, திரு. ஏ.கே.டி. ராஜா, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. வீபி. நாகைமாலி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. ந. நஞ்சப்பன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. பி.எல். சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் சட்டமன்ற விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலிலே திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம், கடலூர் மாவட்டம், அண்ணாமலை நகரில், காவல் துறையின் உதவி ஆய்வாளர் ஒருவர், திருமணமாகி 15 தினங்களுக்குள்ளாகவே, அரிவாளால் வெட்டி, படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்குக் காரணமானவர்களைக் காவல் துறை உடனடியாகக் கைது செய்திருந்தாலும், இனியும் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருக்கும்வண்ணம், துறைரீதியான தனி*

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2014 ஜுலை 24

மனித ஒழுக்கத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கிட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த திரு. கணேசன் அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார். குற்றவாளி உடனே கைது செய்யப்பட்டுள்ளார். காவல் துறை உதவி ஆய்வாளரின் தவறான பாலியல் உறவு இந்தக் கொலைக்குக் காரணமாக அறியப்படுகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அந்த விவரங்களைப் பேசி பிரச்சினைகளுக்குள் போகவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *காவல் துறையில் பணியாற்றக்கூடியவர்களின் இத்தகைய படுகொலைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்று சொல்கிற அதேநேரத்தில், காவல் துறையில் உள்ள ஒரு சிலரின் இதுபோன்ற தவறான பழக்கவழக்கங்களை முறைப்படுத்துவதுபற்றி அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும் எனக் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றிய திரு. கணேசன் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இந்தக் கொலையினுடைய உண்மைத் தன்மையை தமிழக மக்கள் அறிகின்றவகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

2014 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் 22–7–2014 அன்று சுமார் 23-45 மணியளவில் கோவிந்தசாமி என்பவர் ஆஜராகி, தனது மனைவியின் சகோதரி மகன் கணேசன் என்பவர் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்ததாகவும், அவர் கிள்ளை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது அவருக்கும், சிதம்பரம், அம்பலத்தாடி குப்பத்தைச் சேர்ந்த கணவனைப் பிரிந்து வாழ்ந்த வனிதா என்ற பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டதாகவும், வனிதா, கணேசனைத் திருமணம் செய்து கொள்வதற்காக தனது கணவனை விவாகரத்து செய்ததாகவும், கணேசனுக்கு அவரைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் இல்லாததால், கடந்த 9–7–2014 அன்று உறவுப் பெண்ணான சத்யா என்பவரைத் திருமணம் செய்து கொண்டதாகவும், இதனால் ஆத்திரமுற்ற வனிதா, கணேசனைத் தொடர்ந்து மிரட்டி வந்ததாகவும், சம்பவத்தன்று இரவு சத்யா தன்னைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, கணேசனைத் தொடர்பு கொள்ள முடியாததால் நேரில் சென்று பார்க்குமாறு தெரிவித்ததை அடுத்து, தனது மகனுடன் கணேசன் தங்கியிருந்த வீட்டிற்கு தான் சென்றதாகவும், அப்போது வனிதா வீட்டைப் பூட்டிவிட்டு அவசர அவசரமாகச் சென்றதாகவும், ஜன்னல் வழியாகப் பார்த்தபோது கணேசன் கழுத்தில் வெட்டுப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததாகவும், பின்னர் தாங்கள் பூட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்ததாகவும்,*

உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்ததாகவும், வனிதா அவரைக் கொலை செய்திருக்கலாம் எனவும் தெரிவித்து அளித்த புகாரின்பேரில் காவல் துறையினர் இந்திய தண்டனைச் சட்டம் 302–ன்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இவ்வழக்கில் காவல் துறையினர் புலன் விசாரணை மேற்கொண்டு, வனிதாவை தேடிச் சென்று, விருத்தாசலம் பேருந்து நிலையத்தில் கைது செய்து விசாரித்தபோது, அவர், கணேசன் தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறியதால், தனது கணவரிடமிருந்து தான் விவாகரத்து பெற்றதாகவும், பின்னர் கணேசன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளாமல் வேறு பெண்ணைத் திருமணம் செய்து, தனது வாழ்க்கையைக் கெடுத்ததால் ஏற்பட்ட ஆத்திரத்தில் அவரைக் கொலை செய்ததாகவும் கூறியுள்ளார். காவல் துறையினர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தையும் கைப்பற்றினர்.

அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த 31 வயதான கணேசன், கடந்த 2011 ஆம் ஆண்டு காவல் துறையில் நேரடி உதவி ஆய்வாளராகத் தேர்வு செய்யப்பட்டவர். இவர், 18–6–2014 முதல் மருத்துவ விடுப்பில் இருந்து வந்துள்ளார். கடந்த 9–7–2014 அன்று இவருக்கும், சத்யா என்ற பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது. காவல் துறையினர் இதுவரை மேற்கொண்ட விசாரணையில், கணேசனுக்கும், கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்த வனிதாவிற்கும் தொடர்பு இருந்து வந்ததும், கணேசனைத் திருமணம் செய்து கொள்ள வனிதா தனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றுள்ளதும் தெரிய வந்தது. மேலும், கணேசனுக்குத் திருமணம் ஆனதை அறிந்து ஆத்திரமுற்ற வனிதா, அவரை சம்பவத்தன்று ஆயுதத்தால் தாக்கி கொலை செய்ததும் தெரிய வந்துள்ளது. வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. கடலூர், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கணேசன் கொலைக்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.